**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி**

முன்னிலை : திரு.G.யோகேஷ்வரன், B.A., L.L.B.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், காரியாபட்டி

2026 ம் வருடம் ஜுன் மாதம் 11 –ம் நாள் வியாழக்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு எண்.111/2026**

கருப்பசாமி, த/பெ. நாகராஜ்,
6/979, அனுமான் நகர், அல்லம்பட்டி,
விருதுநகர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம். :: மனுதாரர்/ வாகனத்தின் உரிமையாளர்

/எதிர்/

1. அரசுக்காக காவல் சார்பு ஆய்வாளர்,
மல்லாங்கிணறு காவல் நிலையம்
குற்ற எண். 61/2026
பிரிவுகள் 296 (b), 118 (1), 351 (3) BNS Act
:: எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்.

2. முத்துசெல்வி,
எண். 13/66, கிழக்குத்தெரு,
வீரசோழன், விருதுநகர். :: 2 ம் எதிர்மனுதாரர்

3. Collective Manager,
வின்சா கன்சல்டிங்,
விருதுநகர். :: 3 ம் எதிர்மனுதாரர்

*******

இம்மனு என் முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை.2, அவர்கள் ஆஜராகியும் மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ரமேஷ், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வந்து இன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு இருதரப்பு வாதமும் பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

1. மனுதாரர்/வாகன உரிமையாளர் தரப்பில் இவ்வழக்கின் சொத்தான TN 67 CY 4380 HONDA MOTORCYCLE என்ற இருசக்கர வாகனத்தை ஒப்படைக்க கோரி 497, 503 BNSS–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:–**

2. மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் தனது மனுவில், கடந்த 09.03.2026 ம் தேதியன்று தனது மகனும், முனீஸ் என்பவரும் விருதுநகர்– மல்லாங்கிணர் SFS ஸ்கூல் அருகே நின்று கொண்டிருந்தபோது மாரி என்பவருக்கு போன் செய்து உனக்கும் உல்லாரைக்கும் என்ன பிரச்சனை என்று மேற்படி இடத்திற்கு வர சொன்னவுடன் மாலை 6 மணிக்கு மாரியும், அவருடன் 2 நபர்கள் வந்து தனது மகனை பார்த்து ஏன்டா தேவிடியா பயலே உல்லாருக்கும் எங்களுக்குந்தான் பிரச்சனை நீ யாருடா என அசிங்கமாக திட்டி, மாரியுடன் வந்த ஒரு நபர் கையில் வைத்திருந்த ஹெல்மெட்டை வைத்து தன் மகன் மீது எறிந்தும், மற்றொரு நபர் கையில் வைத்திருந்த கத்தியால் தனதுமகன் இடது முன்னங்கையில் வெட்டியும், தனது மகனையும், முனீஸ் என்பவரையும் பார்த்து இத்தோடு ஓடிடுங்க இல்லைன்னா இங்கேயே கத்தியால் வெட்டி கொன்னுருவோம் என மிரட்டிவிட்டு மனுதாரருக்கு சொந்தமான TN 67 CY 4380 HONDA MOTORCYCLE என்ற இருசக்கர வாகனத்தை எடுத்து சென்று விட்டார்கள். இது சம்மந்தமாக தனது மகன் மல்லாங்கிணர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்து அதனடிப்படையில் தனது வாகத்தினை கண்டுபிடித்து குற்ற எண். 63/2026, குற்ற பிரிவுகள் 127 (2), 296 (b), 103 BNS Act ன் படி வழக்கு பதிவு செய்து மேற்படி வாகனமானது காவல் நிலையத்தில் இருந்து வருகிறது. மேற்படி வாகனமானது வெயில் மற்றும் மழை போன்ற இயற்கை சீற்றத்தின் உள்ளாகும் என்பதால் வாகனத்தின் உதிரி பாகங்கள் இரும்பு என்பதால் இரும்பு துருப்பிடித்து பழுதாகிவிடும் என்றும், கடந்த 19.09.2025 ம் தேதியன்று தான் வின்சா கன்சல்டிங் மூலம் ரூ.83,000/– க்கு விலை பேசி அட்வான்ஸ் தொகை ரூ.35,000/– கொடுக்கப்பட்டு பாக்கி தொகை ரூ.48,000/– நிலுவையில் உள்ளது என்றும், மேலும், மேற்படி வண்டியின் உண்மையான உரிமையாளர் முத்துசெல்வி

என்பவர் பெயரில் தான் இன்று வரை இருந்து வருவதாகவும், பாக்கிதொகை கொடுத்த பின்பு தான் தனது பெயருக்கு RC Book மாற்றி தரப்படும் என்று ஒரிஜினல் ஆர்சி புக் வின்சா கன்சல்டிங் வசம் உள்ளது என்றும், மேற்படி வாகனம் மனுதாரருக்கு மிகவும் அவசியம் தேவையாக உள்ளதாலும், மேற்படி வழக்கு சொத்தை மனுதாரரின் வசம் ஒப்படைக்கும் பட்சம் வேண்டும் போது தவறாமல் எந்தவித மாற்றமும் இன்றி ஆஜர் செய்யவும், பிற நிபந்தனைகளுக்கு கட்டுப்படவும் உறுதி கட்டுபட தயாராக உள்ளதாகவும் கூறியுள்ளார்.

3. மேற்படி மனு பரிசீலிக்கப்பட்டது.

<u>**எதிர்மனுதாரர் தரப்பு மறுப்புரை**</u>:-

4. குற்றமுறையீட்டாளர் தரப்பில் பதிலறிவிப்பு பெறப்பட்டது. மேற்படி வழக்கின் சொத்தான TN 67 CY 4380 HONDA MOTORCYCLE என்ற இருசக்கர வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் நீதிமன்ற விசாரணைக்கு தேவைப்படும் போது ஆஜர் செய்ய இயலாமல் கூடும் என்பதாலும், வழக்கு சொத்தை விற்கவோ, சேதப்படுத்தவோ கூடும் என்பதாலும், மேலும், எதிரிகள் மேற்படி வாகனத்தினை வேறொரு வழக்கின் சம்பவத்தில் பயன்படுத்தியுள்ளதாலும், மேற்படி வழக்கு சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைப்பதற்கு கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப் பட்டுள்ளது.

<u>**தீர்முடிவு**</u>:-

5. இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும் போது மேற்படி இவ்வழக்கின் சொத்தான TN 67 CY 4380 HONDA MOTORCYCLE என்ற இருசக்கர வாகனமானது மல்லாங்கிணர் காவல் நிலைய குற்ற எண். 63/2026 என்ற வழக்கில் கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் பி.ஆர்.நம்பர். **36/2026 ல்** ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் மேற்படி இருசக்கர வாகனத்தின் ஆர்.சி.புக்கில் தற்போது வரை 2 ம் எதிர்மனுதாரர் பெயரில் தான் உள்ளது. மனுதாரர் தரப்பில் வாகனத்தின் விற்பனை சான்றிதழ் ஒன்றை தாக்கல் செய்துள்ளார். மேற்படி விற்பனை சான்றிதழை பார்க்கும் போது வாகனத்தின் உண்மையான உரிமையாளர் முத்துசெல்வி மனுதாரருக்கு வாகனத்தினை வின்சா கன்சல்டிங் மூலம் ரூ.83,000/- என பேசி முடிவுசெய்து அதில் அட்வான்ஸ் தொகையாக ரூ.35,000 த்தை மனுதாரர் கொடுத்தும், மீதம் ரூ.48,000/-

பாக்கித்தொகையுடன் TN 67 CY 4380 HONDA MOTORCYCLE என்ற இருசக்கர வாகனத்தினை மனுதாரர் வாங்கியுள்ளார் என்பது தெரியவருகிறது. எனவே, 2ம்எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றத்தில் கடந்த 14.05.2026ம் தேதியன்று அறிவிப்பு அனுப்பியுள்ள போதிலும், 2ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜர் இல்லாததால் அவருக்கு சொந்தமான மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் விற்பனை செய்துவிட்டார் என்றும், அவரது தரப்பில் தெரிவிக்க ஆட்சேபனை இல்லை என்று அனுமானித்து கொள்ளலாம். மேலும். 3ம்எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றத்தில் கடந்த 05.06.2026ம் தேதியன்று அறிவிப்பு அனுப்பியுள்ள போதிலும், 3ம்எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றும், மேற்படி வாகனத்தின் அசல் ஆர்.சி. புக் ஆனது தங்களது நிறுவனத்தில் உள்ளது என்று கூறியுள்ளார். மேலும், ஆவணங்களை பரிசீலிக்கையில், வழக்குச் சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்காத பட்சத்தில் மனுதாரருக்கு நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளதால், வாகனம் வெளியில் பராமரிப்பு இன்றி நிற்பதால் பழுதாகிவிடும் என்பதாலும், வாகனம் மனுதாரருக்கு அன்றாட தேவைக்கும், அன்றாடம் வேலைக்கு சென்று வருவதற்கும் மிகவும் அவசியத் தேவையாக உள்ளதாலும், மேலும், **மாண்புமிகு உச்சநீதிமன்றம் Sunderbhai Ambalal Desai Vs. State of Gujarat** என்ற வழக்கில் வாகனத்தினை பஞ்சநாமா எடுத்து வைத்துக்கொண்டு உரிமையாளரின் இடைக்கால பொறுப்பில் வழங்க உத்தரவிடலாம் என்று வழிகாட்டு முன் தீர்ப்பு வழங்கியுள்ளது. அதன்படி நீதியின் நலன் கருதி, மேற்படி TN 67 CY 4380 HONDA MOTORCYCLE என்ற இருசக்கர வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைப்பதுதான் நீதியின்பால் உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

6) எனவே கீழ்கண்ட நிபந்தணைகளின் படி மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர் தானும் தனக்காக ஒரு பிணையாளரும் ரூ.50,000/—த்திற்கு பிணைமுறிபத்திரம் எழுதிக்கொடுக்கும் பட்சத்திலும்,
2. மனுதாரர்/RC Book ன் உரிமையாளர் நிதி நிறுவனத்தில் அடமானத்தை மீட்ட பின்பு ஒரு மாதத்திற்குள் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

3. வழக்குச் சொத்தான மேற்படி வாகனத்தை புகைப்படம் எடுத்து S-63BSA Certificate உடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் பட்சத்திலும்,
4. மேற்படி வழக்கு சொத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ, மாற்றம் செய்யவோ கூடாது என்றும்,
5. நீதிமன்றம் உத்தரவிடும்போது மேற்படி வழக்கு சொத்தை தவறாது இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டும்.
6. மனுதாரர் பஞ்சநாமா எழுதிக்கொடுக்கும் பட்சத்தில் நிபந்தனைகளின் பேரில் மேற்படி வழக்கு சொத்தினை இடைக்காலமாக மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் வசம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

மேற்படி உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு **2026ம் ஆண்டு ஜுன் மாதம் 11-**ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.